# சொரணாதொட்ட பிரதேச சபை
# பதுளை மாவட்டம்

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 நிதிக் கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 யூன் 19 ஆந் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 யூன் 20 ஆந் திகதியும் கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 ஆகஸ்ட் 05 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

இவ்வறிக்கையில் காணப்படும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்வுக்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ள சொரணாதொட்ட பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீது என்னால் அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளது.

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ரூபா 8,358,593 தொகையான சபையின் புறச் செயற்பாட்டுக் கட்டிட நிர்மாணத்திற்காக பெறப்பட்ட உள்நாட்டுக் கடன் அபிவிருத்தி நிதியக் கடன் மீதி ரூபா 5,616,609 ஆகக் காண்பிக்கப்பட்டமையினால் பொறுப்புக்கள் ரூபா 2,741,984 தொகை குறைவாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு வேலைகளுக்காகக் கிடைக்க வேண்டிய ரூபா 790,236 தொகை கணக்கு வைக்கப்படாமையினால் மூலதன வருமானம் மற்றும் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான கடன்பட்டோர் அதே பெறுமானத்தினால் குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) ரூபா 1,288,118 தொகையான மீளாய்வாண்டிற்குரிய முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 1,132,338 தொகையாகக் கணக்கு வைக்கப்பட்ட காரணத்தினால் ஆண்டின் வருமானம் மற்றும் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு கடன்பட்டோர் ரூபா 155,780 படி குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஈ) இலங்கை வங்கியின் பதுளை அதி விஷேட கிளையில் பேணப்பட்டு வருகின்ற சேமிப்புக் கணக்கின் மீதி உறுதிப்படுத்தல் மற்றும் வங்கிப் புத்தகத்தின் பிரகாரம் ரூபா 110,285 தொகையானது மீளாய்வாண்டின் திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான மீதி ரூபா 194,009 என ரூபா 83,724 தொகை அதிகரித்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 648,018,755 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிப் பெறுபேறுகள்

சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக் கூற்றுக்களின் பிரகாரம், 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 1,180,202 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டிற்கான மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 2,241,585 ஆக இருந்தது

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், உள்ளவாறான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் மீளாய்வாண்டின் பொருட்டு சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்டிருந்த வருமானம், உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

| | வருமான விடயம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | உள்ளவாறானது | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா (000) | ரூபா (000) | ரூபா (000) |
| (i) | வீதவரியும் வரியும் | 3,735 | 4,799 | 227 |
| (ii) | வாடகை | 996 | 640 | 15 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 340 | 531 | - |
| (iv) | ஏனைய வருமானம் | 10,584 | 7,684 | 3,990 |

### 2.2.2 நீதிமன்ற தண்டபணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கிடைக்கவேண்டிய தொகை கீழே காட்டப்படுகின்றது.

| | | ரூபா |
|---|---|---|
| (i) | நீதிமன்ற தண்டப்பணம் | 250,000 |
| (ii) | முத்திரைக் கட்டணம் | 1,200,000 |

### 2.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

(அ) 2006 இன் 12 ஆம் இலக்க முத்திரைக் கட்டண (விஷேட ஏற்பாடுகள்) அதிகாரச்சட்டத்தின் பிரகாரம் உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டிய ரூபா 41,947 தொகையான முத்திரை வரி வைப்புக் கணக்கில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) பல்வேறு தரப்பினருக்கும் வழங்கப்பட்ட முற்பணமான ரூபா 143,740 தொகை இலங்கைக் குடியரசின் நிதிப்பிரமாணம் 371 இன் பிரகாரம் 2012 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) 11 சந்தர்ப்பங்களின் போது வைப்புச் செய்யப்பட்டு 02 வருடங்களை விஞ்சிய ரூபா 115,144 தொகையான வைப்பு இலங்கைக் குடியரசின் நிதிப் பிரமாணம் 571 இன் பிரகாரம் ஒய்வு பெறச் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) செயற்திட்டங்களை அமுல்படுத்துவதிலுள்ள தாமதத்தின் காரணமாக கீழ் தெஹிலன்த கிராமத்திற்கு நீரை வழங்குவதற்காக 2012 இன் குறித்தொகுதுக்கப்பட்ட உதவியின் கீழ் சபைக்குக் கிடைத்த ரூபா 50,000 தொகையை அவ்வேலையில் ஈடுபடுத்தாது ஊவா மாகாண சபைக்கு மீள அனுப்பப்பட்டிருந்தது.

## 3. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டப்பாட்டுப் பகுதிகளில் சபையின் விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பாதீட்டுக் கட்டுப்பாடு

(இ) வருமான நிருவாகம்

(ஈ) ஒப்பந்த நிருவாகம்